KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# தென் மாநில மக்களவைத் தொகுதிகள் குறையாது

## பிரதமர் மோடி உறுதி

திருவல்லா, ஏப். 4: 'மக்கள்தொகையை வெற்றிகரமாக கட்டுப்படுத்தியுள்ள தென்மாநிலங்களில் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை குறைக்கப்படாது; மாறாக, அனைத்துமாநிலங்களும் பலனடையும் வகையில் மொத்த இடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

மக்கள்தொகையைக் கட்டுப்படுத்துவதில் சிறப்பாக செயல்பட்ட தென்மாநிலங்களில் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை குறைக்கப்படும் அபாயம் உள்ளதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்பட எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரும் குற்றஞ்சாட்டிவரும் நிலையில், பிரதமர் மோடி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரை ஏப். 2-ஆம் தேதியுடன் நிறைவு செய்ய ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருந்த நிலையில், ஏப்.16 முதல் 18 வரை மூன்று நாள்களுக்கு கூட்டத் தொடர் நீட்டிக்கப்பட்டுள்ளது.

மக்களவை மற்றும் பேரவைகளில் 33 சதவீத மகளிர் இடஒதுக்கீட்டை விரைந்து அமல்படுத்துவதற்காக அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா கொண்டுவந்து நிறைவேற்றுவதே கூட்டத் தொடர் நீட்டிப்பின் நோக்கமாகும்.

கடந்த 2023-இல் நிறைவேற்றப்பட்ட மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தின்படி, புதிய மக்கள்தொகை கணக்கெடுப்புக்குப் பிறகான தொகுதி மறுவரையறைப் பணிகளைத் தொடர்ந்து, இடஒதுக்கீட்டை அமல்படுத்த வழிவகை செய்யப்பட்டிருந்தது. ஆனால், மக்கள்தொகை கணக்கெடுப்பு அடிப்படையிலான தொகுதி மறுவரையறைக்கு முன்பே மகளிர் இடஒதுக்கீட்டை அமல்படுத்தும் வகையில் அரசமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டுவர மத்திய அரசு முடிவு செய்துள்ளது. அதற்கிணங்க மொத்த மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 543-இல் இருந்து 816-ஆக உயர்த்தவும் வழிவகை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மகளிர் இடஒதுக்கீட்டுக்காக 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பு தரவுகள் பயன்படுத்தப்படும் என்றும், ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரே சீராக 50 சதவீத இடங்கள் அதிகரிக்கப்படும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மற்றொருபுறம், மக்கள்தொகை கட்டுப்பாட்டை வெற்றிகரமாக மேற்கொண்ட தென் மாநிலங்களில் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையோ, பிரதிநிதித்துவமோ குறையக் கூடாது என்ற குரல்களும் வலுத்துள்ளன.



கேரள மாநில சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, திருவல்லாவில் சனிக்கிழமை நடைபெற்ற பிரசார பொதுக்கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி.

**2029 முதல் மகளிர் இடஒதுக்கீடு:** இந்தச் சூழலில், கேரள மாநிலம், திருவல்லாவில் சனிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசார பொதுக் கூட்டத்தில் பங்கேற்ற பிரதமர் மோடி, மகளிர் இடஒதுக்கீட்டை 2029 முதல் அமல்படுத்தும் நோக்கில் தற்போதைய கூட்டத் தொடர் நீட்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசியதாவது: மக்களவை மற்றும் பேரவைகளில் மகளிருக்கான 33 சதவீத இடஒதுக்கீட்டை உறுதி செய்யும் சட்டத்தை தேசிய ஜனநாயக கூட்டணி அரசு கடந்த 2023-இல் நிறைவேற்றியது. இந்த இடஒதுக்கீட்டின் பலன்கள் 2029 முதல் பெண்களுக்கு கிடைக்க வேண்டும். நமது சகோதரிகளில் 33 சதவீதம் பேர் நாடாளுமன்றத்தில் அமர வேண்டும். எனவே, மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தில் மேற்கொண்டு திருத்தங்கள் அவசியமாகின்றன.

**எண்ணிக்கை குறையாது:** அத்துடன், மக்கள்தொகை கட்டுப்பாட்டில் வெற்றிகண்ட தென் மாநிலங்கள், மக்களவைத் தொகுதிகள் எதையும் இழக்காமல் இருப்பதை நாடாளுமன்றத்தில் உறுதி செய்து, அதற்கு சட்டபூர்வ 'முத்திரை' இடவும் நாங்கள் விரும்புகிறோம். அதற்கான சட்டத் திருத்தத்தை மேற்கொள்வதும் கூட்டத் தொடர் நீட்டிப்பின் நோக்கமாகும்.

தமிழகம், கேரளம், கர்நாடகம், ஆந்திரம், கோவா, தெலங்கானா உள்ளிட்ட மாநிலங்கள், மக்கள்தொகையை சிறப்பாக கட்டுப்படுத்தியுள்ளன. இந்த மாநிலங்களில் மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை குறைக்கப்படும் என வதந்திகள் பரப்பப்படுகின்றன. அவற்றில் எந்த உண்மையும் இல்லை.

**அதிக பலனடையும் பெண்கள்:** பெண்களுக்கு அதிகாரமளிப்பதில் நாங்கள் தீவிர கவனம் செலுத்துகிறோம். தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் கொள்கைகளால் பெரிதும் பலனடைந்தவர்கள் பெண்களே. பெண்களுக்கு அதிகாரம்-பிரதிநிதித்துவம் அளிப்பதே எங்களின் முன்னுரிமையாகும். வீடுகள்தோறும் கழிப்பறை கட்டுதல், ஜன்தன் வங்கிக் கணக்கு, பெண்களின் பெயரில் வீடுகள் கட்டுதல் என அவர்களின் வாழ்க்கை சார்ந்த ஒவ்வொரு பிரச்னைக்கும் தீர்வுகாண பாடுபட்டு வருகிறோம். முத்ரா திட்டத்தின்கீழ் ஏராளமான பெண்கள் தங்களின் சொந்தத் தொழிலை தொடங்கியுள்ளனர் என்றார் அவர்.

## அனைத்துக் கட்சிகளும் ஆதரிக்க வேண்டுகோள்

'மகளிர் இடஒதுக்கீட்டை 2029 முதல் அமல்படுத்த வகை செய்யும் மத்திய அரசின் முன்மொழிவுக்கு அனைத்துக் கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டும். 'இண்டி' கூட்டணியில் உள்ள கட்சிகளிடம் ஏற்கெனவே பேசியுள்ளோம். காங்கிரஸ் உள்பட அனைத்துக் கட்சிகளும் அரசியல் கணக்கீடுகள் இன்றி, திறந்த மனதுடன் செயலாற்ற வேண்டும். சட்டத் திருத்தத்தை ஒருமனதாக நிறைவேற்றி, நாட்டின் தாய்மார்கள் மற்றும் சகோதரிகளின் நம்பிக்கையை வெல்ல வேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்தார் பிரதமர் மோடி.

# இந்தியர்கள் அளித்த நன்கொடையால் 40 டன் மருந்துகளை வாங்கிய ஈரான் தூதரகம்

## சொந்த நாட்டுக்கு கொண்டு செல்வதில் சிக்கல்

புதுடெல்லி

இந்தியர்கள் அளித்த நன்கொடையால் 40 டன் மருந்துகளை ஈரான் தூதரகம் கொள்முதல் செய்திருக்கிறது. ஆனால் அவற்றை கொண்டு செல்வதில் தொடர்ந்து சிக்கல் நீடிக்கிறது.

கடந்த பிப்ரவரி 28-ம் தேதி முதல் அமெரிக்கா, ஈரான் இடையே போர் நடைபெற்று வருகிறது. இதில் ஈரானில் இதுவரை 2,000-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். சுமார் 27,000 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். போர் தீவிரமடையும் சூழலில் ஈரானில் மருந்துகள், மருத்துவ உபகரணங்களின் தேவை கணிசமாக அதிகரித்து வருகிறது.

மனிதாபிமான அடிப்படையில் இந்தியாவில் இருந்து ஈரானுக்கு மருந்துப் பொருட்கள் விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு வந்தது. ஈரானின் மஹான் ஏர் என்ற சரக்கு விமானம் இந்தியாவில் இருந்து ஈரானுக்கு மருந்துகளை கொண்டு சென்றது. சில நாட்களுக்கு முன்பு ஈரானின் மஷாத் விமான நிலையத்தில் இருந்து மஹான் ஏர் விமானம் இந்தியாவுக்குப் புறப்படத் தயாராக இருந்தது.

அப்போது அமெரிக்காவின் வான்வழி தாக்குதலில் அந்த விமானம் மிகக் கடுமையாக சேதமடைந்தது. இதனால் இந்தியாவில் இருந்து அர்மீனியா வழியாக ஈரானுக்கு மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### இந்தியர்கள் நன்கொடை

போரினால் பாதிக்கப்பட்டுள்ள ஈரான் மக்களுக்கு உதவுவதற்காக இந்தியர்கள் சார்பில் தாராளமாக நன்கொடை வழங்கப்பட்டு உள்ளன. இந்த நன்கொடைகள் மூலம் இந்தியாவில் மருந்துகளை வாங்க மத்திய அரசிடம் ஈரான் தூதரகம் அனுமதி கோரியது. மனிதாபிமான அடிப்படையில் மத்திய அரசு உடனடியாக அதற்கு அனுமதி வழங்கியது. இதன்படி ஈரான் தூதரகம் சார்பில் சுமார் 40 டன் மருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு உள்ளன. ஆனால் இந்த மருந்துகளை ஈரானுக்கு கொண்டு செல்வதில் தொடர்ந்து சிக்கல் நீடிக்கிறது.

இதுகுறித்து இந்தியாவுக்கான ஈரான் தூதரக அதிகாரி ஒருவர் கூறும்போது, "தற்போது இந்தியாவில் இருந்து 40 டன் மருந்துகளை கொள்முதல் செய்திருக்கிறோம். இது ஈரானுக்கு மிகவும் அவசிய தேவையாக இருக்கிறது. ஆனால் அமெரிக்காவின் தொடர் தாக்குதல்களால் எங்களால் ஈரானுக்கு மருந்துகளை அனுப்பி வைக்க முடியவில்லை" என்றார்.

---

**பொது அறிவு:** மனித உள் உறுப்புகளிலேயே மிகவும் பெரியது கல்லீரல். பித்தப்பை, இரைப்பையின் அருகில் இது அமைந்துள்ளது. உடலின் உள் சூழலைக் கட்டுப்படுத்தி சமன்படுத்துதல், உள்ளிட்டவை இதன் பிரதான பணிகள்.

---

உலன்படார், ஏப். 4: ஆசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் இளம் வீரர் விஸ்வநாத் சுரேஷ் அபாரமாக செயல்பட்டு நடப்பு உலக சாம்பியனும், நம்பர் 1 வீரரான கஜகஸ்தானின் சன்ஸார் டஷ்கேன்பேயை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். மகளிர் பிரிவில் அங்குஷிதா போரோவும், ஆடவர் பிரிவில் சச்சின், நரேந்திரும் அரையிறுதிக்கு முன்னேறினர். இதன் மூலம் மேலும் 4 பதக்கங்கள் உறுதியாகி உள்ளன.



அங்குஷிதா, சச்சின், நரேந்தர் .

மங்கோலியத் தலைநகர் உலன்படாரில் நடைபெறும் ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் ஏற்கெனவே இந்திய அணிக்கு 3 பதக்கங்கள் உறுதியாகி உள்ளன.

இதற்கிடையே சனிக்கிழமை நடைபெற்ற மகளிர் 65 கிலோ காலிறுதியில் இந்தியாவின் அங்குஷிதா போரோ 5-0 என்ற புள்ளிக் கணக்கில் கஜகஸ்தானின் லாரா எஸ்என்கில்டியை வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

ஆடவர் 50 கிலோ காலிறுதியில் இந்தியாவின் விஸ்வநாத் சுரேஷ் 5-0 என்ற புள்ளிக் கணக்கில் சரமாரியாக குத்துவிட்டு கஜகஸ்தானின் சன்சர் டஷ்கன்பேயை வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

மேலும், 90 பிளஸ் கிலோ பிரிவில் இந்தியாவின் நரேந்தர் 5-0 என்ற புள்ளிக் கணக்கில் ஆர்க்கன் அஹாயேவை வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

60 கிலோ பிரிவில் இந்திய வீரர் சச்சின் 5-0 என்ற புள்ளிக் கணக்கில் செங் வெய் லீயை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

நடப்பு தேசிய சாம்பியன் விஸ்வநாத், யூத் உலக ஆடவர் குத்துச்சண்டை போட்டியில் தங்கம் வென்றார். ஆசிய யு 22 போட்டியில் வெண்கலமும் வென்றார்.

ராணுவ ஹவில்தாரான விஸ்வநாத் சுரேஷ் ராணுவ விளையாட்டு மையத்தில் பயிற்சி பெறுகிறார். வேகம், விவேகம், தூரத்தை கட்டுக்குள் வைத்தல், திட்டமிடல் போன்றவற்றின் மூலம் பிளைவெயிட் பிரிவில் சிறந்த வீரராக உருவெடுத்துள்ளார்.

# இந்திய விமானப் படைக்கு 1,000 கிலோ வெடிகுண்டு தயாரிப்பு

## மத்திய அரசு நடவடிக்கை

**புது தில்லி, ஏப். 4:** இந்திய விமானப் படைக்காக வானிலிருந்து வீசக்கூடிய 1,000 கிலோ எடை கொண்ட வெடிகுண்டை வடிவமைத்து தயாரிப்பதற்கான நடவடிக்கையைப் பாதுகாப்பு அமைச்சகம் முன்னெடுத்துள்ளது.

இதுதொடர்பாக பாதுகாப்புத் துறை மூத்த அதிகாரிகள் கூறியதாவது: இந்திய விமானப் படைக்காக வானிலிருந்து வீசக்கூடிய 1,000 கிலோ வெடிகுண்டை இந்தியாவிலேயே வடிவமைத்து தயாரிக்கும் திட்டம் 2 கட்டங்களாக நடைபெற உள்ளது.

இதில் 1,000 கிலோ குண்டு ரகங்களின் 6 மாதிரிகளை வடிவமைத்து மேம்படுத்துவது முதல் கட்டமாகும். அதில் திருப்தி ஏற்பட்ட பின்னர் குண்டுகளை கொள்முதல் செய்வது இரண்டாவது கட்டமாகும். 2,000 கிலோ எடை கொண்ட அமெரிக்காவின் எம்கே-84 குண்டை போல இந்தக் குண்டை வடிவமைத்து தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

விருப்பக் கடிதம் வெளியிடப்பட்ட நாளில் இருந்து ஒப்பந்தம் கையொப்பமாகும் நாள் வரையிலான இரண்டரை ஆண்டுகாலத்தில் இந்தக் குண்டை வடிவமைத்து உருவாக்க காலவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தக் காலவரம்பில் குண்டுகளின் மாதிரியை உருவாக்குதல், அதைப் பரிசோதித்தல், மதிப்பீடு செய்தல், கடைசியாக ஒப்பந்தத்தை இறுதி செய்தல் ஆகியவை நடைபெறும்.

இந்தியாவில் இந்திய விமானப் படைக்குச் சொந்தமான இடங்கள் அல்லது பிற தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் குண்டுகளின் பரிசோதனைகள் நடைபெறும். விருப்பக் கடிதம் வெளியிடப்பட்ட பின்னர், தனியார் துறை உள்பட தகுதிவாய்ந்த இந்திய நிறுவனங்கள் குண்டை வடிவமைத்து தயாரிப்பதற்கான ஒப்பந்த தேர்வில் பங்கேற்கலாம்.

பாதுகாப்புத் துறையில் உள்நாட்டிலேயே வடிவமைத்து, தயாரிக்கப்படும் பொருள்களை கொள்முதல் செய்யும் பிரிவின் கீழ், வானில் இருந்து வீசக்கூடிய 600 குண்டுகளைக் கொள்முதல் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர்.

2030-க்குள் 20 சதவீதமாக உயரும்

# 'டிஜிட்டல்' பொருளாதாரத்தில் இந்தியா வேகமாக வளர்கிறது

## மத்திய அமைச்சக செயலர் கிருஷ்ணன் கணிப்பு

சென்னை

இந்தியா 2030-க்குள் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக உருவாக டிஜிட்டல் மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவற்றுடன் இணைந்த திறன் மேம்பாடு அவசியமாகும் என்றும், டிஜிட்டல் பொருளாதாரத்தில் இந்தியா வேகமாக வளர்வதாகவும் மத்திய மின்னணு, தகவல் தொழில்நுட்ப அமைச்சக செயலர் எஸ்.கிருஷ்ணன் தெரிவித்தார்.

சாஸ்த்ரா நிகர்நிலை பல்கலைக்கழகத்தில் மின்னணு உற்பத்தி, மென்பொருள் மேம்பாடு, மின்சார இயக்கம், அரைமின்கடத்தி சோதனை, பேக்கேஜிங் ஆகிய வசதிகளை தொடங்கி வைத்து அவர் பேசும்போது, ஐசிஆர்ஐஇஆர் ஆய்வை மேற்கோள்காட்டி, இந்தியாவின் டிஜிட்டல் பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வருவதாகவும் 2021–22-ம் ஆண்டில் 12 சதவீதம் இருந்தது 2030-க்குள் 20 சதவீதமாக உயரும் எனவும் குறிப்பிட்டார். மேலும், மின்னணு கூறுகள் உற்பத்திக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் காரணமாக, 2025 நிதியாண்டில் ஏற்றுமதி சுமார் 40 பில்லியன் அமெரிக்க டாலராக உயர்ந்துள்ளதாகவும், 2030-க்குள் மின்னணு உற்பத்தி தகவல் தொழில்நுட்ப சந்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலரை எட்டும் திறன் கொண்டதாக மாறும் என்றும் அவர் தெரிவித்தார்.

பஜாஜ் ஆட்டோ, டாடா எலக்ட்ரானிக்ஸ், பிரேக்ஸ் இந்தியா, எச்.எல் மாண்டோ போன்ற தொழில் நிறுவனங்களுடன் சாஸ்த்ரா இணைந்து செயல்படுவதற்கு அவர் பாராட்டு தெரிவித்தார்.

இதுதவிர பஜாஜ் ஆட்டோ நிறுவனம் சாஸ்த்ராவில் பொறியியல் திறன் பயிற்சி மையம் அமைத்துள்ளது. டாடா எலக்ட்ரானிக்ஸ் மற்றும் கலிபர் இன்டர்கனெக்ட்ஸ் நிறுவனங்களும், தொழில்துறை பயிற்சியை முக்கிய அம்சமாகக் கொண்ட மின்னணு உற்பத்தி பாடத் திட்டங்களை வழங்க சாஸ்த்ராவுடன் ஒப்பந்தம் செய்துள்ளன.

இந்த நிகழ்ச்சியில் சாஸ்த்ரா பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.வைத்தியசுப்பிரமணியம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

சிறுபான்மையின நிறுவனங்களை பாதிக்கும்

# வெளிநாட்டு நிதி மசோதாவை மறுபரிசீலனை செய்ய வேண்டும்

## கத்தோலிக்க யூனியன் வலியுறுத்தல்

குவாஹாட்டி

வெளிநாட்டு நிதி நடைமுறையை கடுமையாக்க வெளிநாட்டு நிதி திருத்த மசோதாவை மத்திய அரசு மக்களவையில் கடந்த மாதம் 25-ம் தேதி அறிமுகம் செய்தது.

இதுகுறித்து அகில இந்திய கத்தோலிக்க யூனியன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இந்த மசோதாவில் வெளிநாட்டு நிதி ஒழுங்குமுறை சட்ட உரிமங்கள் ரத்து செய்யப்படும் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் சிறுபான்மை நிறுவனங்களின் சொத்துகளை கட்டுப்படுத்த அல்லது அவற்றை அகற்ற அரசு அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கும் பிரிவுகள் கவலையளிப்பதாக உள்ளன. இது போன்ற சட்டப்பிரிவுகள் தவறான முன்மாதிரியை ஏற்படுத்தும் மற்றும் நிர்வாக ரீதியான வரம்பு மீறலுக்கு வழிவகுக்கும்.

இந்த நடவடிக்கை, அரசியலமைப்பு ரீதியாகப் பாதுகாக்கப்பட்ட உரிமைகளுக்குள் நேரடியாக ஊடுருவுவது போன்றது. இந்த திருத்தங்கள், மதச் சுதந்திரத்துக்கு உத்தரவாதம் அளிக்கும் சட்டப் பிரிவுகளுக்கு முரணாக இருக்கலாம். எனவே, இந்த மசோதாவை மத்திய அரசு முழுமையாக மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### எந்த நாட்டையும் சார்ந்திருக்க விரும்பாமல்

# அங்கோலா கச்சா எண்ணெய் வாங்கும் இந்தியா

புதுடெல்லி

எரிபொருள் தேவைக்கு எந்த ஒரு தனி நாட்டையும் சார்ந்திருக்க விரும்பாத இந்தியா, பல நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்கிறது. தற்போது ஆப்பிரிக்க நாடான அங்கோலாவில் இருந்து கச்சா எண்ணெய் மற்றும் சமையல் எரிவாயுவை அதிகம் கொள்முதல் செய்கிறது.



ரஷ்யா - உக்ரைன் போர் கடந்த 2022-ம் ஆண்டு தொடங்கியதில் இருந்து ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் விதித்தன. ஆனால், ரஷ்யாவின் நட்பு நாடுகளான இந்தியா மற்றும் சீனா ஆகியவை ரஷ்யாவிடம் இருந்து அதிகளவில் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்தன. இந்தியாவுக்கு மலிவு விலையில் கச்சா எண்ணெயை ரஷ்யா வழங்கி வந்தது.

ஆனால், இதற்காக இந்தியாவுக்கான இறக்குமதி வரியை அமெரிக்கா உயர்த்தி நெருக்கடி கொடுத்தது. இதனால் ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா குறைத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாயின. தற்போது ஈரான் போர் காரணமாக கச்சா எண்ணெய் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், ரஷ்யாவிடம் தற்காலிகமாக கச்சா எண்ணெய் வாங்க அமெரிக்கா ஒரு மாதம் அனுமதி அளித்தது.

இந்தியா தனது எரிபொருள் தேவைக்கு எப்போது ஒரு குறிப்பிட்ட நாட்டை சார்ந்திருப்பதில்லை. வளைகுடா நாடுகள் உட்பட பல நாடுகளில் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் கொள்முதல் செய்து வருகிறது. தற்போது ஆப்பிரிக்க நாடான அங்கோலாவில் இருந்து கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு வாங்குவதை இந்தியா அதிகரித்துள்ளது.

**2 மில்லியன் பேரல்**

அங்கோலாவில் இருந்து சமீபத்தில் இந்தியா 2 மில்லியன் பேரல் கச்சா எண்ணெய் வாங்கியது. தற்போது மேலும் 1 மில்லியன் பேரல் கச்சா எண்ணெய் வாங்க இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் ஒப்பந்தம் செய்துள்ளது. இங்கிருந்து ஹங்கோ மற்றும் க்ளோவ் ரக கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது. இது ஆசிய சுத்திகரிப்பு நிலையங்களுக்கு உகந்த ரகமாகும். இதிலிருந்து பெட்ரோல் மற்றும் டீசல் அதிகளவில் பெற முடியும்.

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய், காஸ் ஆகியவற்றுக்கு நெருக்கடி ஏற்பட்டாலும், இந்தியாவில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படாத வகையிலும், விலை ஏற்றத்தை தடுக்கும் வகையில் மத்திய அரசு பல்வேறு நாடுகளில் அவசரமாக கொள்முதல் செய்து வருகிறது.